www.Padasalai.Net www.TrbTnpsc.com

FMS

# முதல் இடைப் பருவத் தேர்வு - ஜுலை - 2019

12 – ம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 X 1 = 10

**சரியான விடையைத் தேர்ந்தெடு.**

1. அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கியவர்
   அ) ஃபேயால் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப்
2. மேலாண்மை என்பது ஒரு ................................
   அ) கலை ஆ) கலை மற்றும் அறிவியல்
   இ) கலை அல்லது அறிவியல் ஈ) அறிவியல்
3. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒருங்கமைத்தல்
   இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்
4. .......................... உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாக செய்யப்படுகிறது.
   அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதி விலக்கு மேலாண்மை
   இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்
5. முதல் நிலைச் சந்தை ...................... எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) இரண்டாம் நிலை சந்தை ஆ) பணச் சந்தை
   இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுக சந்தை
6. NSE தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
   அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997
7. ........................ உலகின் பழமையான பங்கு சந்தையாகும்.
   அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை
   இ) தேதிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டான் பங்குச் சந்தை
8. நம்பிக்கையுள்ள ஊக வணிகர் என்பவர்
   அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து
9. செபியின் தலையகம் ............................ ஆகும்.
   அ) கல்கத்தா ஆ) மும்பை இ) டெல்லி ஈ) சென்னை
10. தேசிய பங்கு சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு .................. ஆகும்.
    அ) ஜனவரி 1996 ஆ) ஜுன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) ஜுன் 1996

### பகுதி - ஆ

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** 5 X 2 = 10

11. மேலாண்மை கருவிகளை பட்டியலிடுக.
12. திட்டமிடுதல் என்றால் என்ன?



Scanned by CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

13. உடனடி சந்தை என்றால் என்ன?

14. மூலதன சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?

15. பண சந்தை வரைவிலக்கலணம் தருக.

16. பண சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?

17. தரகர் என்று யாரை குறிப்பிடுவர்?

18. செபியின் 2 நோக்கங்களை எழுதுக.

## பகுதி - இ

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 3 = 15

19. மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?

20. இயக்குதலின் முக்கியத்துவம் என்ன?

21. குறியிலக்கு மேலாண்மையின் 3 இயல்புகள் யாவை?

22. உடனடி சந்தை மற்றும் எதிர் நோக்கிய சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகள் யாவை?

23. தேசிய தீர்வக மற்றும் களஞ்சிய அமைப்பு - சிறுகுறிப்பு வரைக.

24. பங்குச் சந்தையின் ஏதேனும் 3 குறைபாடுகள் யாவை?

25. காளை மற்றும் கரடி விளக்குக.

26. செபியின் ஏதேனும் 3 அதிகாரங்களை விளக்குக.

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 5 = 15

27. நவீன மேலாண்மை கோட்பாடுகளை விவரி. ***(அல்லது)***

மேலாண்மையின் முக்கிய பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)

28. முதல் நிலை சந்தைக்கும் இரண்டாம் நிலை சந்தைக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக. (ஏதேனும் 5) ***(அல்லது)***

மூலதன சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க.

29. பங்கு பரிவர்த்தனைக்கும் பண்ட மாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5) ***(அல்லது)***

புறத்தோற்றமற்ற பத்திரங்களின் நன்மைகளை விவரி.



Scanned by CamScanner

## முதல் இடைப் பருவத் தேர்வு – 2019

### +2 வணிகவியல்

1. டேலர் .(ஆ)
2. கலை மற்றும் அறிவியல் (இ)
3. கட்டுப்படுத்துதல் (ஈ)
4. முதுகலை மற்றும் வணிக மேலாண்மை (அ)
5. புதிய வெளியீடுகளுக்கான சந்தை (இ)
6. 1992 (ஆ)
7. இலண்டன் பங்குச் சந்தை (அ)
8. காளை (அ)
9. மும்பை (ஆ)
10. டிசம்பர் 1996 (இ)

### பகுதி – ஆ

11. கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியல், தரவு செயலுக்கம்

.12. (i) திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.

(ii) திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது. திட்டமிடுதல் என்பது முன்கூட்டியே முடிவெடுப்பதைக் குறிக்கிறது.

(iii) திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்க பூர்வமான மதிப்பீடு ஆகும்.

13. ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும்.

14. தனிநபர்கள், நிறுவனங்கள், அரசு வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் போன்றோர் மூலதன சந்தையின் பங்கேற்பாளர்கள் ஆவார்.

15. பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பணத்திற்கு நிகரான பல்வேறு ஆவணங்களை கையாளும் மொத்த அமைப்பிற்கான கூட்டுப் பெயராகும்.
–குரோத்தர்.

16. கருவூல இரசீதுகள், குறுகிய கால அழைப்பு முன்பணம், வணிக இரசீதுகள், உறுதிமொழி பத்திரங்கள், ரெப்கோ – மீள் வாங்கல் வீத விகிதம்.

17. தரகர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை. தரகர்கள் பத்திரங்களை வாங்குபவர்களையும் விற்பனை செய்கின்ற தன் வணிகர்களையும் ஒன்றாக இணைத்து பேரம் முடிவடைய உதவுகின்றனர். இதற்காக இரு தரப்பினரிடமிருந்தும் கழிவு பெறுவர்.

18. (i) முதலீட்டாளர்களை பாதுகாப்பது (iii) தரகர் மீதான கட்டுப்பாடு
(iv) உள்வழி வியாபாரத்தை சரிபார்த்தல் (iv) பங்கு பரிவர்த்தனைகளின் ஒழுங்குமுறை.

### பகுதி – இ.

19. மேலாண்மை வீச்செல்லையை தீர்மானிப்பது படுக்கை அமைப்பு (விரிவான வீச்சு ) மற்றும் செங்குத்து அமைப்பாகும் (குறுகலான வீச்சு). மேலாண்மை பரப்பு என்பது நிர்வாகக் கட்டமைப்பின் கிடைமட்ட நிலைகளோடு தொடர்புடையதாகும். பரந்த அளவுள்ள மேலாண்மை பரப்பில் குறைவான அதிகாரப் படிநிலை மட்டங்கள்இருக்கும். குறுகிய மேலாண்மை பரப்பில் அதிக படிநிலை மட்டங்கள் மிகுதியாக இருக்கும்.

20. தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப்பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது. அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம்,

பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

21. (i) குறுகிய கால இலக்குகளுடன் நிறுவனத்தின் நீண்டகால இலக்குகளை இணைக்க குறியிலக்கு மேலாண்மை முயற்சி செய்கிறது.
(ii) சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்த முயற்சி செய்கிறது.
(iii) குறியிலக்கு மேலாண்மை இலக்குகளை மட்டும் அடையச் செய்வதல்ல, திறமையான செயல் திறனையும் அடையச் செய்கிறது. இலக்கு அமைக்கும் செயல்பாட்டில் ஊழியர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.

| 22. அடிப்படை | உடனடி சந்தை | எதிர்நோக்கிய சந்தை |
|---|---|---|
| **பொருள்** | ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடி சந்தை ஆகும் | சொத்து வழங்கலும் ரொக்கம் செலுத்தலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைபெறும் சந்தை எதிர்கால சந்தை ஆகும். |
| **விலை நிர்ணயம்** | விலைகளை உடனுக்குடன் சந்தை நிலவரத்தைப் பொறுத்து விலை நிர்ணயிக்கப்படுகிறது. | எதிர்காலத்தில் பொருட்களை கைமாற்றிக் கொள்வதற்காக இன்றே விலைகளை முடிவு செய்வது ஆகும். |

23. பங்கில்லா வணிக முறையின் கீழ் பத்திரங்களின் தீர்வுகள் அனைத்தும் பதிவேட்டின் முலமே நடைபெறுகிறது.
**பங்கில்லா வணிக முறையின் மூன்று பகுதிகள் –**
(i) தேசிய வணிக ஒப்பீடு மற்றும் அறிக்கை முறையானது பத்திரச்சந்தையின் வரையறை மற்றும் கட்டளைகளை விளக்குகிறது.
(ii) தீர்வு தேதியன்று தரகர்களின் நிகரரொக்கம் மற்றும் பங்கு பொறுப்புகளை தேசிய அகற்றீட்டு முறை முடிவு செய்வதையே குறிக்கோளாக கொண்டுள்ளது.
(iii) எந்த ஒரு பத்திரமும் மாற்றப்படாமல் மின்னணு முலம் பதிவுகள் செய்யப்பட்டு பங்கு உரிமையை மாற்றுவதையே தேசிய வைப்பு அமைப்பு செய்கிறது.

24. (i) பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.
(ii) பங்குச் சந்தைகளின் உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லாதது.
(iii) ஆரோக்கியமற்ற ஊகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி. ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டகட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது.
(iv) பங்கு மாற்றகங்களில் பங்குகளை பட்டியலிட சரியான ஒழுங்குமுறைகள் இல்லை.

25. **காளை ;–**
- ✓ பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர்காளை என்றழைக்கப்படுவர்.
- ✓ இவ்வகை ஊகவணிகர் தெஜிவாலா என்றும் அழைக்கப்படுவர்.
- ✓ இவர்கள் எதிர்காலத்தில் அதிக விலையில் பத்திரங்களை விற்க இயலும் என்ற எண்ணத்தில் தற்போது பத்திரங்களை வாங்குகின்றனர்.

**கரடி ;–**
- ✓ எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணம் கொண் ஊக வணிகர் கரடி அல்லது மண்டிவாலா ஆவர்.
- ✓ இவ்வகை ஊகவணிகர், பங்குகளைப் பின்னர் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் தான் வைத்திருக்கும் பங்குகளைத் தற்போது அதிக விலையில் விற்பனை செய்வர்.
- ✓ ஒரு கரடி, பொதுவாகத் தன்னுடைய எதிரியைத் தரையில் தள்ளி அழுத்துகிறது.
- ✓ அதே போல ஒரு கரடி ஊகவணிகரும், பங்குச் சந்தையில் பங்குகளின் விலையைக் கீழே தள்ளுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.
- ✓ ஒரு கரடி ஊகவணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

26. **பங்குச்சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள் தொடர்பான அதிகாரங்கள்**
- ✓ பத்திர வணிகத்தை மேற்கொள்ளும் பங்கு மாற்றகங்கள் மற்றும் இடைத்தரகர்களிடம் செபி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது.
- ✓ ஆய்வு மற்றும் கூர்ந்தாய்வு மற்றும் பிறநோக்கத்திற்காக வணிகபரிவர்த்தனைகளில் பங்குச்சந்தை மற்றும் இடைத்தரகர்களிடமிருந்து தகவலை கேட்கலாம்.

**நாணய அபராதங்களை விதிக்கும் அதிகாரம்**

- ✓ மூலதனசந்தை இடைத்தரகர்கள் மற்றும் பிறபங்கேற்பாளர்கள் மீது வரம்பு மீறல்களுக்கு நாணய அபராதங்களை சுமத்துவதற்கு செபி அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளது.
- ✓ இது ஒரு குறுகிய காலத்திற்கு தங்கள் பதிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

**பணியிடங்களில் செயல்பாடுகளை தொடங்குவதற்கான அதிகாரம் ஒதுக்கப்பட்டுள்ளது**

- ✓ செபி ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஒரு அதிகாரம் உண்டு. உதாரணமாக, இது பல்வேறு இடைத்தரகர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கலாம் அல்லது முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான குறிப்பிட்ட விதிகளை அறிமுகப்படுத்தலாம்.

**பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்**

உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அல்லது வணிக வங்கியாளர்களின் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை செபி கொண்டுள்ளது.

**பகுதி – ஈ.**

27. **வேலைப் பகிர்வு**

- ✓ இக்கோட்பாட்டின்படி தொழிலமைப்பின் மொத்தப்பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்யவேண்டும்.
- ✓ தொழிலாளர்ஒவ்வொரு தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணியில் அத்தொழிலாளி சிறப்பீடுபாடும் நிபுணத்துவமும் அடையும் வண்ணம் தொழில்முறை வளர்ச்சியையும் பணிச்சூழலையும் உருவாக்கவேண்டும்.
- ✓ இதன்மூலம் உற்பத்தி அதிகரிப்பதுடன் தொழிலாளியின் உழைப்புச் செயல்திறன் அதிகரித்து நிபுணத்துவத்திற்கு வழி வகுக்கும்.

**அதிகாரமும், பொறுப்பும்**

- ✓ தங்களது கட்டளையின்மூலம் விளைந்தவிளைவுகளுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதலைக் குறிக்கின்றது.
- ✓ அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.
- ✓ பொறுப்பு என்பது அவ்வாணையினை நிறைவேற்றும் கடமையைக் குறிக்கின்றது.

**ஒழுங்குமுறை**

- ✓ இது கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்றவை ஆகும்.
- ✓ இவ்வொழுங்கு நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

**கட்டளையொருமை**

- ✓ ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெற வேண்டும். அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும்.
- ✓ அவ்வாறன்றி ஒரு கீழ்ப்பணியாளர் ஒன்றுக்கு மேற்பட்ட உயர்அதிகாரியிடம் உயர் ஆணைகளைப் பெற்றுச் செயல்பட வேண்டியிருந்தால் அது குழப்பத்தையும் முரண்பாடுகளையும் உருவாக்கி விடும்.

**ஆணையுரிமைவரிசை/ தரவரிசைத் தொடர்**

- ✓ ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதை குறிக்கும்.
- ✓ உயர்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரைஅனைத்து மேலாளர்களையும் அனைத்து மட்டங்களிலும் இணைப்பதன்மூலம் அதிகாரப்பூர்வமான தெளிவான ஒரு ஆணையுரிமை வரிசை இருக்க வேண்டும்.
- ✓ இதுவே ஆணையுரிமை அல்லது தரவரிசைத் தொடர் ஆகும்.

**ஒரு முனைஇயக்கம்**

- ✓ அனைத்துத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் ஒரே குழுவில் வைக்க வேண்டும். அக் குழுவிற்கு ஒரே செயல்திட்டம் இருக்க வேண்டும்.
- ✓ அவர்கள் ஒரே மேலாளரின் கீழ் பணியாற்ற வேண்டும். ஒரே நோக்கத்தினைக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரே செயல் திட்டம் இல்லாமல் இருக்குமாயின் அந்நோக்கம் நிறைவேறாமல் போகலாம்.

27. **மேலாண்மையின் முக்கிய பணிகள்**

**திட்டமிடுதல் –**

- ✓ திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.
- ✓ திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.
- ✓ திட்டமிடுதல் என்பது முன்கூட்டியே முடிவெடுப்பதைக் குறிக்கிறது.
- ✓ திட்டமிடுதல் என்பது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்க பூர்வமான மதிப்பீடு ஆகும்
- ✓ தற்போதைய நடவடிக்கைகளை நிறுவப்பட்ட இலக்கிற்கேற்ப சரிசெய்து கொள்ள திட்டமிடுதல் உதவுகிறது.

**ஒழுங்கமைத்தல்**

- ✓ ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதும், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல்முறையே ஒழுங்கமைத்தல் ஆகும்.

**பணிக்கமர்துதல்**

- ✓ பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது, பழைய நபர்களுக்கு ஓய்வு அளிப்பது, அனைத்து நபர்களின் செயல்திறன்களை மதிப்பீடு செய்வது மற்றும் பணியாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவது ஆகியன பணிக்கமர்த்துதலில் அடங்கியுள்ளது.

**இயக்குவித்தல்**

- ✓ தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ் நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.
- ✓ அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம், பங்கேற்பு இயக்கம் ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தேவையான அனைத்து விபரங்களுக்கும் உரிய தகவல் தெரிவிக்கப்படுகிறது.

**ஒருங்கிணைத்தல்**

- ✓ நிறுவனத்தின் அனைத்து செயல்களும் ஒழுங்குபடுத்தும் செயல்பாடுகளின் கீழ் குழு வாரியாகவோ அல்லது பிரிவு வாரியாகவோ பிரிக்கப்படுகின்றன.
- ✓ இத்தகைய குழுவான செயல்பாடுகள் ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**செயலூக்கமளித்தல்**

- ✓ செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
- ✓ ஒரு பணியை விரைவாக செய்து முடிக்கவும், பணியாளர்களுக்கு பணியின் மீதான விருப்பத்தை வளர்க்கவும் முடியும்.
- ✓ பணியாளர்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப பணிபுரிய சாதகமான பணிச் சூழல், நியாயமான முறையில் நடத்தப்படல், பணம் சார்ந்தமற்றும் பணம் சாராத ஊக்குவிப்புகள், திறம்பட்ட தகவல்தொடர்பு மற்றும் பண்பான அனுகுமுறை ஆகியவற்றையே செயலூக்கத்தின் மூலம் ஏற்படுத்தி தர இயலும்.

28.

| அடிப்படை | முதல் நிலைச் சந்தை | இரண்டாம் நிலைச் சந்தை |
|---|---|---|
| பொருள் | இது புதிய வெளியீடுகளுக்கான சந்தை | இது முன்னரே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை |
| கொள்முதல் வகைகள் | நேரடி | மறைமுகம் |
| பத்திர விற்பனை | ஒரே ஒரு முறை மட்டும் | பல முறை நடைபெறும் |
| விலை | நிலையான விலை | தேவை மற்றும் அளிப்பு பொருத்து மாறுபடும் |
| நிதி | புதிய நிறுவனம் மற்றும் முன்னரே இயங்கி கொண்டிருக்கும் நிறுமத்திற்கு நிதி வழங்குகிறது | நிறுமங்களுக்கு நிதி வழங்குவதில்லை. |
| இடைநிலையர்கள் | ஒப்புறுதியாளர்கள் | முதலீட்டாளர்கள் |

**28. (அல்லது ) மூலதன சந்தையின் சிறப்பியல்புகள் –**

**அ) பத்திரங்களின் சந்தை**

பங்குகள், கடனுறுதிப்பத்திரங்கள் போன்ற பத்திரங்கள் மூலதனச்சந்தையில் கையாளப்படுவதால் இது பத்திரங்களின் சந்தை என அழைக்கப்படுகிறது.

**ஆ) விலை**

பத்திரங்களின் விலை மூலதனச் சந்தையில் பத்திரங்களின் தேவை மற்றும் அளிப்பை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

**இ) பங்கேற்பாளர்கள்**

மூலதனச்சந்தையின் ஈடுபடுபவர்கள் தனிநபர்கள், நிறுமங்கள், அரசு வங்கிகள், மற்றும் இதர நிதி நிறுவனங்கள் போன்றவர்களை உள்ளடக்கியுள்ளது.

**ஈ) இட அமைவு**

மூலதனச் சந்தைக்கான இடம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதில்லை என்றாலும் பங்கு மாற்றகம் போன்ற நன்கு தெரிந்த இடமாக இருத்தல் வேண்டும்.

**உ) நிதிசார்ந்த சொத்துக்களின் சந்தை**

மூலதனச்சந்தை நீண்ட கால நிதி சார்ந்த சொத்துக்களுக்கான ஒரு மேடையை வழங்குகிறது.

29.

| சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை | பண்டமாற்று பரிவர்த்தனை |
|---|---|---|
| பொருள் | பங்கு சந்தை என்பது தொழில்துறை | ஒரு பண்டமாற்ற பரிமாற்றம் என்பது |

| | | |
|---|---|---|
| | மற்றும் நிதிப்பாதுகாப்பின் கொள்முதல் மற்றும் விற்பனைக்கான ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சந்தை ஆகும். | பண்டமாற்ற சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் இடத்தில் பொருட்களை பரிமாற்றம் செய்வதாகும். |
| **பணிகள்** | எளிதான சந்தைப்படுத்துதலை வழங்குதல் | பத்திரங்களுக்கு தேவை ஏற்படுத்துதல் அல்லது பத்திரங்களுக்கு விலைக் காப்பீடு சேவைகள் மற்றும் நீர்மைதன்மை ஏற்படுத்துதல். |
| **நோக்கம்** | பொருள் மூலதன உருவாக்கம் மற்றும் மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் | ஆபத்து குறைவு மூலம் பொருட்கள் விற்பனையை அதிகரிக்க உதவுதல். |
| **பங்கேற்பாளர்** | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள் முகவர்கள் நிறுவனங்கள் வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள் |
| **ஒப்பந்தங்களின் காலம்** | ரொக்கம் , உடனடி வழங்கல் மற்றும் பதினைந்து நாட்களுக்கான ஒப்பந்த கணக்கு | எதிர்கால சந்தை ஒப்பந்தங்களுக்கான 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மற்றும் உடனடி பண ஒப்பந்தங்கள் |
| **விலை மேற்கோள்** | முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை ஒரு முனை மேற்கோள் மட்டுமே சாத்தியம் | எதிர்கால ஒப்பந்தங்களுக்கான பலமுனை மேற்கோள் சாத்தியமாகும். |

**(அல்லது) புறத்தோற்றமற்ற பத்திரங்களின் வகைகள் .**

- ✓ இழப்பு, திருட்டு, மோசடி மற்றும் சேதம் போன்ற பங்குச் சான்றிதழ்களைப் பற்றிய அபாயங்கள் புறத்தோற்றமற்ற பத்திரங்களினால் முழுமையாக நீக்கப்படுகின்றன.
- ✓ காகிதப் பரிவர்த்தனைகளைவிட புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் மூலம் விரைவாக பரிவர்த்தணைகள் மற்றும் வர்த்தகத்தில் அதிக செயல்திறன் ஆகியவற்றை வழங்குகிறது. பங்கு கணக்குகள் தானாக நிகழ்நிலைப் படுத்தப்படுகிறது.
- ✓ தரகர்களின் வருகை தேவையில்லாமலேயே எந்த இடத்திலும் கணிணியில் வர்த்தகம் செய்ய முடியும் என்பதால் வர்த்தகம் என்பது மிகவும் வசதியாகி விட்டது.
- ✓ நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பங்குகள் இணைப்பு மூலம் உருவாக்கப்படும் பங்குகள் புறத்தோற்றமற்ற பத்திரங்களாக முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- ✓ பத்திரங்களைபரிமாற்றுவதற்காகமுத்திரைத்தாள் கட்டணகடமைஅவசியமில்லை. இதனால் கணிசமான அளவிற்கு பரிவர்த்தனைசெலவைக் குறைக்கிறது.
- ✓ ஒரு குறிப்பிட்டகணக்கில் பங்கு மற்றும் கடனீட்டு பத்திரங்களை இருவரும் வைத்திருக்க சில வங்கிகள் அனுமதிக்கின்றன.

**prepared by**
**G.PRAKASH. M.COM.M.PHIL.B.ED.D.TED**
**GUGAI HR.SEC.SCHOOL. SALEM 6**
**9488270034**